செ.வெ.எண்: 10/நவம்பர் நாள்: 10.11.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## நாட்டுக்கோழிகள் வளர்ப்பு திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகள் விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் (NADP) கீழ் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் கோழிவளர்ப்பு மூலம் தொழில் முனைவோர் மேம்பாடு (Entrepreneurship Development through Native Chicken Rearing) திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் நாட்டுக்கோழிகள் வழங்கும் திட்டத்திற்கு 50 சதவீத மானியத்துடன் 11 ஒன்றியங்களுக்கு தலா 5 பயனாளிகள் வீதம் 55 இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, அதில் முதல் தவணையாக 50 சதவீத திட்டம் செயல்படுத்துவதற்காக 28 பயனாளிகள் ( ஒரு ஒன்றியத்திற்கு 2 அல்லது 3 பயனாளிகள்) கீழ்க்காணும் வரையறைகளுக்குட்பட்டு தேர்வு செய்யப்பட உள்ளார்கள். ஒவ்வொரு பயனாளிக்கும் ஒரு நாள் வயதுடைய 1000 எண்ணம் கோழிக்குஞ்சுகள், 1500 கிலோ தீவனம் மற்றும் இன்குபேட்டர் கொள்முதல் செய்திட 50 சதவீத மானியத் தொகை (Back ended subsidy) வழங்கப்படும்.

பொருளாதார ரீதியாக ஏழ்மையில் உள்ள நபர்கள் மட்டுமே பயனாளிகளாக தேர்வு செய்யப்படுவர். கணவனை இழந்த பெண்கள்/ஆதரவற்றோர்/மூன்றாம் பாலினத்தவர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஏதேனும் ஒரு கிராம பஞ்சாயத்தில் நிரந்தர முகவரிதாரராக இருக்க வேண்டும். பயனாளிகள் அவர்களுக்கு சொந்த திறனில் 2500 சதுர அடியில் 1000 கோழிக்குஞ்சசுகள் பராமரிப்பதற்கு ஏதுவாக கொட்டகை அமைக்கப்படல் வேண்டும். கால்நடை பராமரிப்புத் துறையின் வேறு எந்த கோழி வழங்கும் திட்டத்திலும் பயன் பெற்றிருக்கக்கூடாது. மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழுவினால் தேர்வு செய்யப்பட்டு பயனாளிகள் இறுதி செய்யப்படுவர்கள்.

அதன்படி மேற்குறிப்பிட்டுள்ள வரையறைகளின்படி தகுதியுள்ள பயனாளிகள் 23.11.2020 வரை அருகாமையில் உள்ள கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர்களிடம் தக்க விவரங்களுடன் விண்ணப்பிக்க இதன்வழி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**